**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 21–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**<u>இ.ம.எண். 5/2026 இன் அ.வ.எண்.14/2021</u>**

**<u>CNR No. TNSA13-000023-2021</u>**

Dr.சந்திரசேகரன் . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. காந்தி
2. ராணி எலிசபெத்
3. வட்டாட்சியர், ஆத்தூர்
4. சார்பதிவாளர், ஆத்தூர்
5. மாவட்ட ஆட்சியர், சேலம். . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 18.04.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பழனியப்பன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சந்தானம் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>**மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**</u>

மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி என்றும், மனுதாரர் இவ்வழக்கை 2 வது பிரதிவாதியும், ஞானசேகரன் என்பவரும் செய்து கொண்ட திருமணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும், இறந்துபோன காந்தி அம்மாள் என்பவருக்கு 2 வது பிரதிவாதி தான் முதல்நிலை வாரிசு என்று 15.10.2020 ல் வழங்கிய வாரிசு சான்றிதழ் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும், 2 வது பிரதிவாதியோ அல்லது அவரது முகவர்களோ தாவா சொத்துக்களை விற்கிரயமோ, வில்லங்கமோ செய்யக்கூடாது என்று தடை உத்தரவு பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும், 4 வது பிரதிவாதி தாவா சொத்துக்கள் குறித்து 2 வது பிரதிவாதியோ அல்லது அவரது முகவர்களோ பத்திர பதிவிற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தால் அதை நிராகரிக்கும் படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கு தாக்கல் செய்யும்போது வீரபத்திரன் என்பவரின் இறப்பு சான்றிதழும், ஞானசேகரன் என்பவரின் வாரிசு சான்றிதழும் மற்றும் ஆத்தூர் வட்டாட்சியர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பியுள்ள ஆவணங்களும் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு மிக முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் மற்றும் நியாயமானது என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**2 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 2ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்.

மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1 முதல் 3 வரையான ஆவணங்களான இறப்புச் சான்றிதழ் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ்களை, உரிய அதிகாரிகளிடமிருந்து எளிதாகப் பெற்றுக்கொள்ள இயலும் என்றும், மேலும் அவற்றை உற்றுநோக்கும்போது, அவை வெறும் நகல்களே என்பது தெளிவாகும், எனவே, அவற்றை இரண்டாம் நிலை சான்றுகளாகக் கருத இயலாது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

1ம் எதிர்மனுதாரர் எதிருரை இல்லை என்றும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றும், தங்களது தரப்பில் எதிருரை இல்லை என குறிப்புரை தாக்கல் செய்துள்ளனர்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர்/வாதி இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை உரிய அதிகாரிகளிடமிருந்து எளிதாக பெற்றுக்கொள்ள இயலும் என்றும், காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வாதி தனது வழக்கை நிரூபிக்க அவசியமான ஆவணங்கள் என்பதாலும், இந்த ஆவணங்கள் பற்றி எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு உள்ளதாலும், மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு

எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 21–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.04.21 15:49:10 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

1. <u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

2. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.04.21 15:49:25 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 05/2026 இன்
அ.வ. எண். 14/2021
நாள் : 21.04.2026